ॐ

விவிய விஷ்யா  विविध विद्या

VIVIDHA VIDYA  காலாண்டிதழ்



# விவித வித்யா

தாரண, ஐப்பசி - மார்கழி  October- December 2004



ஸ்தாபக ஆசிரியர்:

சுரபாரதி சேவா துரந்தரர்
வித்வ சிரோமணி, வித்யா கலாபமணி,
சிவகலா பூஷணம், சம்ஸ்கிருத பண்டிதர்.
**பிரம்மஸ்ரீ ச. பஞ்சாக்ஷர சர்மா**

| | | | |
|---|---|---|---|
| மலர் 3 | எழுந்திரு! விழித்திரு! கோரியகருமம் நிறைவேறும்வரை உழைத்திரு! | இதழ் 2 |  |

**இன்று புதிதாய்ப் பிறந்தோம்.**

**பழைமையில் காலூன்றிநின்று புதுமைகளை வரவேற்போம்.**

**வேற்றுமைகளிலிருந்து ஒற்றுமையை நாடுவோம்.**

**முரண்பாடுகளை முன்வைத்து ஒருமைப்பாடு காண்போம்.**

8

நிர்வாக ஆசிரியர்
பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.(Hons.)
(கோப்பாய் சிவம்)

25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

𑌓𑌂। 𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌦𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌿𑌦𑌂 𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌣
𑌮𑍁𑌦𑌚𑍍𑌯𑌤𑍇। 𑌪𑍂𑌰𑍍𑌣𑌸𑍍𑌯 𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌾𑌦𑌾𑌯
𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑍇𑌵𑌾𑌵𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇॥

𑌓𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃॥

**ஓம். பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே. பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே.**

**ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:**

இறைவன் பூரணமானவர். இந்த உலகம் பூரணமானது. பூரணமான இறைவனிலிருந்தே பூரணமான உலகம் தோன்றியுள்ளது. பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்தபின்னும் பூரணமே எஞ்சியுள்ளது.

**- ஈச, பிருஹதாரண்ய உபநிஷதங்களின் சாந்தி பாடம்.**

## எண்ணித் துணிக

*பேசுவதற்குமுன் செவி கொடுங்கள்.*
*எழுதுவதற்குமுன் சிந்தியுங்கள்.*
*குறைகூறுவதற்குமுன் பொறுத்திருங்கள்.*
*பிரார்த்தனை செய்யுமுன் மன்னியுங்கள்.*
*எதையும் கைவிடுமுன் முயலுங்கள்.*
*மரணத்துக்குமுன் மற்றவர்க்கு உதவுங்கள்.*

**இறைவனை யென்கதியை யென்னுளே யுயிர்ப்பாகிநின்ற**
**மறைவனை மண்ணும் விண்ணுமலிவான் சுடராய்மலிந்த**
**சிறையணி வண்டறையுந் தில்லைமாநகர்ச் சிற்றம்பல**
**நிறையணி யாமிறையை நினைத்தேனினிப் போக்குவனே**

**-திருவாலியமுதர் திருவிசைப்பா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவித வித்யாவை வளர்க்கும் வித்யார்த்திகள்

நாம் வேண்டிக்கொண்டதற்கிணங்க அநேக அன்பர்கள் விவிதவித்யாவின் தொடர்ச்சியான வெளியீட்டிற்கு உதவும்வண்ணம் நிதியுதவிகளை வழங்கிவருகிறார்கள். வெளிநாடுகளிலும் விவிதவித்யாவைப் பலர் ஆவலுடன் வரவேற்கின்றனர்.

**ஆண்டுச் சந்தா ரூபா 100.00** (நான்கு இதழ்களிற்கு) என்பதற்கிணங்க, ஓராண்டுச் சந்தா முதல் ஐந்தாண்டுச் சந்தா வரை வழங்கியுள்ளனர் சிலர்.

**ஆயுள் சந்தா ரூபா 1000.00** வழங்கியுள்ளனர் சிலர்.

அதற்குமேல் **அன்பளிப்பு** என்றவகையில் அதிக நிதியை அள்ளி வழங்கியுள்ளனர் இன்னும் சிலர்.

இம் மூவகையிலும் ஆதரவு வழங்கியவர்களின் பட்டியல் சென்ற இதழில் தரப்பட்டது. அவ்விதழில் தவறவிடப்பட்ட சில பெயர்களும் புதிதாக ஆதரவுக் கரம் நீட்டியவர்களின் பெயர்களும் இங்கு தொடர்கிறது.

*ஆரம்பத்திலேயே சந்தாக்களை வழங்கியவர்கள் சிலரின் பெயர் விபரங்கள் தவறிவிட்டன என்பதை உணருகிறோம். சந்தா செலுத்தியும் பெயர்விபரம் வெளியிடப்படாதவர்களும் இதழ் கிடைக்கப் பெறாதவர்களும் தயவுசெய்து எம்மை மன்னித்து எம்முடன் தொடர்புகொண்டு விபரங்களை அரியத்தருமாறு வேண்டிக்கொள்கிறோம்.*

## 1. அள்ளித் தரும் அரியவர்கள்

25. பிரம்மஸ்ரீ இ. பிரணதார்த்திஹரக் குருக்கள், வீரபத்திரர் கோவில், கோப்பாய்.
27. பிரம்மஸ்ரீ தி. குமாரசதாசிவ சர்மா, நீர்வேலி.
28. பிரம்மஸ்ரீ வை. சபேஸ்வர சர்மா, ஊரெழு.
29. பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா, சமாதான நீதிவான், கப்பித்தாவத்தைப் பிள்ளையார்கோவில், மருதானை.

## 2. ஆயுள் சந்தா அளிக்கும் ஆதரவாளர்கள்

33. பிரம்மஸ்ரீ தி. கிருஷ்ணானந்த சர்மா, 97/6, குருநாகல் வீதி, சிலாபம்.
34. பிரம்மஸ்ரீ பா. குமாரசாமிசர்மா,(பாஸ்கரன்), 42 11,சுவிசுத்தராம வீதி, கொழும்பு - 6.
35. பிரம்மஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள், மயிலணி.
36. பிரம்மஸ்ரீ அகிலேஸ்வரக் குருக்கள், துர்க்கை அம்மன் கோவில்.தெல்லிப்பளை
37. பிரம்மஸ்ரீ சு. கௌரிபாலக் குருக்கள், தடங்கன்புளியடி முருகன் கோவில், நெல்லியடி.
38. பிரம்மஸ்ரீ ந. சபாரத்தினக் குருக்க், புன்னாலைக்கட்டுவன்.
39. பிரம்மஸ்ரீ அ. பஞ்சாபகேச சர்மா, ஆரங்கால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. பிரம்மஸ்ரீ ஆர். குகதாசேஸ்வரக் குருக்கள், கப்பித்தாவத்தை சிவன்கோவில், மருதானை.
41. பிரம்மஸ்ரீ யோ. ரஞ்சிதக் குருக்கள், கப்பித்தாவத்தை சிவன்கோவில், மருதானை.
42. பிரம்மஸ்ரீ வே. முத்துக்குமாரசாமிக் குருக்கள், கனடா.
43. பிரம்மஸ்ரீ சி. பாலகுமார், தமிழ்நாடு.
44. பிரம்மஸ்ரீ கு.சண்முகராஜக் குருக்கள், திக்கரை, காரைநகர்.
45. பிரம்மஸ்ரீ திருஞானசம்பந்தக் குருக்கள் மணற்காடு முத்துமாரிஅம்மன்கோவில், காரைநகர்.
46. பிரம்மஸ்ரீ சி.குஞ்சிதபாதக்குருக்கள் கொச்சிக்கடை சிவன்கோவில், கொழும்பு.
47. பிரம்மஸ்ரீ குருவாயுரசர்மா, கொச்சிக்கடை சிவன்கோவில், கொழும்பு.

## 3. இயல்பாக ஆண்டுச் சந்தா நல்கும் இனியவர்கள்

57. பிரம்மஸ்ரீ இ. கலாராசாக் குருக்கள், சிவசுப்பிரமணியசுவாமி கோவில், உரும்பிராய்.
58. பிரம்மஸ்ரீ இ. வரதராஜக் குருக்கள், பன்னைக்கட்டை ஒழுங்கை, பருத்தித்துறை.
59. பிரம்மஸ்ரீ இ. சபேசக் குருக்கள், பன்னைக்கட்டை ஒழுங்கை, பருத்தித்துறை.
60. திரு சி. மகேந்திரன், வேலடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
61. திரு த. தர்மராஜா, ஆசிரியர், கந்தசாமி கோவிலடி, கேர்பாய்.
62. பிரம்மஸ்ரீ தி. சரவணபவ சர்மா, மண்முனை வடக்கு, பிரதேச செயலகம், மட்டக்களப்பு.
63. பிரம்மஸ்ரீ எம். இரத்தினசாமிக்குருக்கள், பழம் பிள்ளையார் கோவிலடி, மல்லாகம்.
64. பிரம்மஸ்ரீ க. சபாபதி சர்மா, 23, தில்லைக்கலட்டி வீதி, சுன்னாகம்.
65. பிரம்மஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், ஆஞ்சனேயர் தேவஸ்தானம், மருதனார்மடம்.
66. பிரம்மஸ்ரீ சு.து. சுந்தரமூர்த்திக் குருக்கள், (மாவை) கொக்குவில்.
67. பிரம்மஸ்ரீ சந்திரா ஸ்ரீபதிக் குருக்கள், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
68. பிரம்மஸ்ரீ பா.பஞ்சநத சர்மா, நெல்லியடி.
69. பிரம்மஸ்ரீ சு. மகேஸ்வரக்குருக்கள், கப்பித்தாவத்தை சிவன்கோவில், மருதானை.
70. திரு கே. யோகேந்திரன், உபயகதிர்காமம், புலோலி தெற்கு, புலோலி.
71. பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள், மஞ்சவனப்பதி, கொக்குவில்.
72. பிரம்மஸ்ரீ ஸ்ரீதரக்குருக்கள், காளிகோவிலடி, கோண்டாவில்.
73. பிரம்மஸ்ரீ கா. வைத்தீஸ்வரக் குருக்கள், காரைநகர்.
74. பிரம்மஸ்ரீ பி. நித்தியானந்தக்குருக்கள்,கொச்சிக்கடை சிவன்கோவில், கொழும்பு.
75. பிரம்மஸ்ரீ மு. சற்குருநாதக்குருக்கள்(ஜீவா) வல்லபாசக்தி துர்க்கா தேவஸ்தானம், மனையாவெளி, திருகோணமலை.

---

**அடுத்த இதழில்.........**

அமரர் பண்டிதர் ச.ப.சர்மா தொகுத்து வழங்கிய

## நீதி மணிமாலா

**தேர்ந்தெடுத்த சுவையான நீதி சுலோகங்களின் தொகுப்பு(உரையுடன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயதூரா - மரியாதை

~~ பிரம்மஸ்ரீ து. சுந்தரமூர்த்திக் குருக்கள் B.A.

ஐயதூரா என்ற சொல்லுக்கு எல்லை, நேர்மை, மதிப்பு என்னும் அர்த்தங்கள் உண்டு. இவை அனைத்தும் நற்பண்பை உணர்த்துவன. தமிழ்மொழியில் கௌரவம் என்ற தொனியில் நாம் மரியாதை என்ற சொல்லைப் பயன் படுத்துகின்றோம்.

பெரியவர்கள் முன் நின்று பேசும்போது அவர்களுக்கு கௌரவம் கொடுக்கும் பாங்கில் பேசுவது மரியாதை எனக் கொள்ளப்படுகிறது. அதனால் தான் "மரியாதையாகப் பேசு", "மரியாதையாக நட" என்ற சொற்றொடர்களை உபயோகிக்கிறோம். "மரியாதை கொடுத்து மரியாதையைப் பெறு" எனச் சொல்வதுமுண்டு. மதிப்புக்குப் பிரதி உபகாரம் மதிப்பு. மதிப்பைப் பெறவிரும்புபவர் மற்றவருக்கு மதிப்பளிக்க வேண்டும்.

கடன் பெற்றவர் கடனைத் திருப்பித்தர மறுத்தாலோ அல்லது தாமதித்தாலோ "மரியாதையாகப் பணத்தைக் கொடு" என்று எச்சரிக்கை செய்வதுபோல கடன் கொடுத்தவர் பேசுவது வழக்காயிற்று. இவ்விடத்து மரியாதை என்ற சொல் கௌரவத்தை சிதைக்க வேண்டாமென்று அறிவுறுத்தல் போல அமைகிறது.

பொதுவாக, அரசன்முன் சேவகர், குருமுன் மாணவன், கற்றவர் முன் பாமரர், பெற்றோர் முன் பிள்ளைகள், பெரியோர்முன் சிறியோர், கணவன்முன் மனைவி நடந்து கொள்ளும் பண்பை மரியாதை செய்யும் பண்பாகக் கருதுகிறோம்.

இங்கு அடக்கமான பேச்சு, நிற்கும் நிலை, கட்டளைகளை ஏற்கும் தன்மை என்பன எவ்வாறு இருக்க வேண்டுமென்ற அறிவையும் உடையவர் நாம். தெய்வசந்நிதானங்களில் பக்தர்கள் தெய்வத்துக்குக் கொடுக்கும் மரியாதை நம்பிக்கை, பக்தி, பணிவு, என்ற நிலையை உணர்த்துகிறது.

பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர், "மன்னனாச் சேர்ந்து ஒழுகல்" என்ற அதிகாரத்தில் மரியாதையை எல்லை என்ற பொருளில் வைத்து கூறுவது

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந் தொழுகு வார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் முதலானோர் அரசனிடம் மரியாதையாக நடந்து கொள்வதற்கு எல்லை போடுகிறார். அதாவது குளிர்காய்பவன் எப்படித் தீயை அண்மிக்காமலும் தீயைவிட்டு அகலாதும் தேவையான தூரத்தில் இருந்து குளிர்காயவேண்டுமோ அந்தளவு தூரத்தில் நின்று அரசனுக்கு சேவிக்க வேண்டு மென்கிறார்.

தொல்காப்பியரும் தொல்காப்பியப் பாயிரத்தில் குரு மாணவன் உறவை இதே உதாரணத்தால் மரியாதைத் தூரத்தை எல்லைப்படுத்திக் காட்டுகிறார். ஆனால் இவ்விரு விடத்தும் வித்தியாசம் யாதெனில்,

அரசனிடம் நெருங்கினாலும் அகன்றாலும் துன்பம் விளையும் என வள்ளுவரும், குருவிடத்தில் மாணவன் நெருங்கினாலும் அகன்றாலும் உரிய கல்விப் பயனை அடைய மாட்டான் எனத் தொல்காப்பியரும் எல்லை போட்டுக் காட்டுகின்றனர். இஃது எல்லையை உணர்த்தும் மரியாதை இதனால் ஊபடூாஜா ஓ®ாப० எனப்படும்.

பெற்றோரிடம் பிள்ளை காட்டும் மரியாதை வேறுபட்டது. சிறுபிள்ளையாக இருக்கும் பருவத்தில் பெற்றோருக்கும் பிள்ளைக்கும் இருக்கும் தொடர்பு பாசத்தின் பாற்பட்டது. ஆனால் பிள்ளைகள் யௌவனப் பருவம் அடைந்து விட்டால் ஏற்படும் தொடர்பு மரியாதைக்குரிய பண்போடு கலந்து விடுகிறது.

பாசம் இருக்கும் ஆனால் நாணம் கலந்த மரியாதையும் தென்படுகிறது. சிறுபராயத்தில் தம்பிள்ளைகளை மடியில் வைத்தும் தோளில் சுமந்தும் முத்தமிட்டும் பாசத்தைச் சொரிந்த பெற்றோர்முன் பருவமடைந்த பிள்ளைகள், தோளில் சாயவோ முத்தமிடவோ தழுவவோ பின்னிற்பர். அவ்விடத்துக் காணப்படும் மரியாதை வித்தியாசமானது. நாணத்தின் மேலீட்டால் மரியாதை உள்ளத்தளவிலேயே மட்டுப்படுகிறது.

கற்றோர் முன் நின்றுபேசும் பாமரர் கற்றோருக்கு கொடுக்கும் மதிப்பு மரியாதையின்பால் பட்டது. அறிஞன் என்ற மதிப்பைக் கொடுக்க வேண்டி, கைகட்டி, எழுந்து நின்று வணங்கி உரையாடுவது கல்விக்குக் கொடுக்கும் சிறப்பு

எனவே மரியாதை - ஊபடூாஜா என்ற பதம் இடத்துக்கிடம் வேறுபட்ட பொருளில் பிரயோகிக்கப்படுவதை உற்று நோக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிலை மெல்லும் கலை

விவித வித்யா மூன்றாம் இதழில் வெற்றிலை மெல்லும் கலை என்னும் தலைப்பில் ஒரு குறிப்பு எழுதப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் தாம்பூலத்தின் குணச்சிறப்புக் கூறுகின்ற ஒரு சுலோகம் எங்கோ இருப்பது நினைவில் வந்தது சிரமப்பட்டுத் தேடியதன் பயனாக அச் சுலோகத்தைப் 19ம் நூற்றாண்டுப் புத்தகமொன்றில் கண்டபிடிக்க முடிந்தது. அக்காலத்தில் கல்கத்தாவில் வாழ்ந்த பேரறிஞர்களில் ஸ்ரீ ஜீவாநந்தவித்யாஸாகரர் மிகப் பிரசித்தி பெற்றவர். அவர் பதிப்பித்த வடமொழி நூல்களில் ஒன்றான பஞ்சதந்த்ர வியாக்கியானமும் ஒன்று. அந்நூலிற் கண்டறிந்ததே பின்வரம் தாம்பூல மஹிமை.

மிகச் சிதைவடைந்த அந்நூலையும் வேறு சில நூல்களையும் நீண்ட காலத்துக்கு முன்னர் எமக்குத் தந்துதவியவர் திருகோணமலையறிஞர் காலஞ்சென்ற மா. பீதாம்பரம் அவர்கள். இவர் விபுலானந்தருடன் நெருங்கிய தொடர்புடையவர். இந்நூல்கள் விபுலாநந்த அடிகள் கல்கத்தாவில் இருந்தபோது வாங்கிப் படித்தவையாயிருக்கலாம்.

தாம்பூலம் கடு திக்த முஷ்ண மதுரம்
க்ஷாரம் கஷாயான்விதம்।
வாதக்னம் கபநாசனம் க்ருமிஹரம்
தௌர்கந்த்ய தோஷாபஹம்।
வக்த்ரஸ்யாபரணம் விசுத்திகரணம்
காமாக்னி ஸந்தீபனம்।
தாம்பூலஸ்ய ஸகே த்ரயோதச குணா:
ஸ்வர்கேபி தே துர்லபா:॥

பொருள்: தாம்பூலம் கசப்பும் துவர்ப்பும் கலந்த இனிமையுடையது. காரமுடையது. நிறத்துடன் கூடியது. வாதத்தைக் அகற்றுவது. கபத்தை அழிப்பது. கிருமிகளைக் கொல்வது. கெட்ட நாற்றமென்னும் குற்றத்தைப் போக்குவது. முகத்துக்கு அணியாவது. வாயழுக்கைப் போக்குவது. ஆசைத் தீயை வளர்ப்பது. நண்ணானே, தாம்பூலத்திற்குப் பதின்மூன்று நற்குணங்கள் உள்ளன. இவை சுவர்க்கத்திலும் கிடையாதவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்பூத்த பூசுரர்கள்

## மட்டக்களப்பு ஆனைப்பந்தி

## *பிரம்மஸ்ரீ. வி. வரதராஜக்குருக்கள் (சுழிபுரம்)*

குரு பாரம்பரியத்தின் தாற்பரியத்தை கடைப்பிடித்தும் சிவாசாரியர்க்குரிய அனைத்து அம்சங்களையும் தன்னகத்தே கொண்டும் வாழ்ந்தவர் இற்றைக்கு 12 ஆண்டுகளுக்கு முன் அமரத்துவமடைந்த சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வாழிடமாகவும் கொண்ட அமரர் பிரம்மஸ்ரீ வி. வரதராஜக்குருக்கள் ஆவார்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சுழிபுரத்தில் சப்தபுரிகளில் ஒன்றாகிய காஞ்சிபுரத்தை அடியாகக் கொண்டு வாழ்ந்து வந்த ஸ்ரீவத்ஸ கோத்ரம் ஆபஸ்தம்ப சூத்திரத்தின் வழி வந்த பிரம்மஸ்ரீ. ஐ. விஸ்வநாதக் குருக்களுக்கும் ஸ்ரீமதி பொன்னம்மாவுக்கும் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் அருளால் அவரது பூசை முறைக் காலத்தில் கார்த்திகைச் சோமவாரமும் பூச நக்ஷத்திரமும் கூடிய 11.12.1911 அன்று இவர் பிறந்தார். இவருக்குத் தாய் தந்தையர் வரதராஜ சர்மா என்று பெயரிட்டனர். இவருக்கு வீணாகானவிதூஷணி, வள்ளியம்மை எனும் இரு சகோதரிகள். இவரே கடைசியும் ஆண்குழந்தையும் ஆவார்.

சிறுவயதிலேயே அறிவில் சிறந்து விளங்கினார். ஏழாவது வயதில் உபநயனம் செய்யப்பட்டார். பதினோராவது வயதில் தந்தையை இழந்தார். தாயின் அரவணைப்புடனும் சகோதரிகள் கணவர்களான பறாளாய் பிரம்மஸ்ரீ வேதாரண்யேஸ்வரக் குருக்கள் அல்வாய் பிரம்மஸ்ரீ செல்லத்துரைக் குருக்கள் ஆதரவாலும் பாடசாலைக் கல்வியினையும், கோவில் கிரியை நெறிகளையும் கற்றுத் தேறினார். அன்னையின் மனம் நோகாதபடி நடந்து பாடசாலைப் படிப்பை முடித்த பின் வடலியடைப்பு பிரம்மஸ்ரீ அண்ணாசாமிக் குருக்கள் அவர்களிடம் வேதம் ஆகமம் முதலியவற்றை ஐயம் திரிபறக் கற்றார். இவருடன் கற்றவர்கள் சுழிபுரம் பிரம்மஸ்ரீ நடராஜக்குருக்கள், பிரம்மஸ்ரீ சு. சுப்பிரமணியக் குருக்கள், பறாளாய் பிரம்மஸ்ரீ ஷண்முகரட்ண சர்மா (வாத்தியார்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதவிரக் கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் இவற்றிற்கு பயன் சொல்லும் ஆற்றலையும் சிறந்த தமிழறிஞரிடம் கற்றுத்தேறினார்.

தமது குலதெய்வமான குடியிருப்பு வள்ளியம்மன் ஆலயத்திலும் மற்றும் பெரியதம்பிரான் ஆலயத்திலும் பூசை செய்வதோடு தமது புரோகிதங்களையும் செய்து வந்தார். ஊரிலுள்ள ஆலயங்களில் புராணம் பயன் சொல்லவும் படிக்கவும் சென்று வந்தார். உரிய பருவத்தில் சுழிபுரம் பிரம்மஸ்ரீ சபாரத்தினக்குருக்கள் ஸ்ரீமதி காமாட்சிஅம்மாளது புதல்வி சௌபாக்கியவதி அன்னம்மாவைக் கரம்பற்றி இல்லறம் நடத்தி வருகையில் 1945 ஆம் ஆண்டளவில் மைத்துணர் பிரம்மஸ்ரீ வேதாரண்யேஸ்வரக் குருக்களவர்களால் மட்டக்களப்பு ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவிலில் அறிமுகம் செய்யப்பட்டார். அன்று முதல் 1990 ம் ஆண்டுவரை சுமார் 44 வருடங்கள் சேவையாற்றினார்.

அக்காலகட்டத்திலேயே அவரது வாழ்வு வசந்தம் பெற்றது. ஆனைப்பந்தி ஆலயத்திலேயே பிரம்மஸ்ரீ வேதாரண்யேஸ்வரக் குருக்களால் ஆசாரியாபிஷேகம் செய்யப் பெற்று சிவாசார்யார் ஆனார். இவர் முதலில் செய்த மஹோற்சவம் தனது பெயர் வரக்காரணமாய் அமையப் பெற்ற பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்திலாகும். ஆனைப்பந்திப் பிள்ளையார் ஆலயத்தில் மகோற்சவங்களை நித்திய நைமித்தியங்களை பக்தியுடன் ஆற்றி வந்ததையும் முப்பது வருஷங்களாக ஒரே ஆலயத்தில் சிறந்த சேவை ஆற்றியதையும் பாராட்டி 1975 ஆம் ஆண்டு ஆலய பரிபாலன சபையார் "பூஜாகிரியாபூஷணம்" என்னும் பட்டத்தையும், காளிகாமடு கற்பகவிநாயகர் ஆலய பரிபாலன சபையார் "பிரதிஷ்டா பூஷணம்" என்னும் பட்டத்தையும் நல்லை ஆதீனம் "சிவாகம சிரோமணி" என்னும் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தனர்.

இவரைக் கிழக்கு மாகாணத்தில் தெரியாதவர்களே கிடையாது காரணம் இவர் கிழக்கு மாகாணத்தில் செல்லாத கோவில்களே கிடையாது. "ஆனைப்பந்தி வரதராஜக்குருக்கள்" என்றால் பிரசித்தம். ஆனைப்பந்திப் பிள்ளையார் ஆலய வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்தவர். ஆனைப்பந்திப் பிள்ளையார் ஆலயத்தில் மூன்று கும்பாபிஷேகங்களை நடத்தி முடித்தவர். இவர் ஆதரிக்காத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணோத்தமர்களை விரல் விட்டுத்தான் எண்ண வேண்டும். ஏனெனில் அனைவரும் நண்பர்கள். இவருக்கு எட்டு மக்கள். இவர் மட்டக்களப்பு மக்களின் கண்கண்ட தெய்வமாகவே வாழ்ந்து வந்தார்.

ஆனைப்பந்தியான் குடைக் கீழேயே வாழ்ந்து வந்த இவர் இரண்டொரு வருஷங்கள் நோய் வாய்ப்பட்டு 1992 ஐப்பசிமாத தேய்பிறை பஞ்சமித்திதி கூடிய திருவாதிரை நாளில் ஆனைப்பந்தியானடி சேர்ந்தார்.

அன்னார் வாழ்வில் தூய்மை, வாய்மை, புறங்கூறாமை, பொறுமை, அன்பு என்னும் சிறப்பியல்புகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தார்.

அவர் நாமம் என்றும் நிலைத்து நிற்கும்.

## வாழ்த்துகின்றோம்

நான்கு சிவாசாரியப் பெருந்தகைகள் அண்மையில் **ஷஷ்டியப்தபூர்த்தி** கொண்டாடினார்கள்.

1. யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்தவரும் வண்ணார்பண்ணை விநாயகர் ஆலய பிரதம குருவுமாகிய சமாதான நீதிவான் **சிவஸ்ரீ சந்திரா ஸ்ரீபதிக் குருக்கள்** அவர்கள்,

2. கொழும்பு பம்பலப்பிட்டி சம்மாங்கோட்டார் மாணிக்க விநாயகர் ஆலய பிரதமகுரு **சிவஸ்ரீ பா. சிற்சபேசக் குருக்கள் (மணி ஐயா)** அவர்கள்,

3. கொழும்பு சம்மாங்கோட்டார் கதிர்வேலாயுதசுவாமி கோவில் பிரதமகுரு **சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள்** அவர்கள்,

4. யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு சமாதான நீதிவான் **சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர்** அவர்கள்

ஆகிய அப் பெருந்தகைகளை வாழ்த்திப் போற்றி வணங்கிநிற்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர்களுடன்....

.............விவிதவித்யா உடனேயே வாசித்து முடித்தேன். சந்தேக விளக்கம் மிகவும் உபயோகமானது. தொடர்ந்து வரவேண்டும். நாராயண சாஸ்திரிகள், சீதாராம சாஸ்திரிகள் ஆகியோர் பற்றிய கட்டுரைகள் அவசியம் தேவையானவை..........

**பிரான்ஸ்.** **பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதிசர்மா**

...................விவிதவித்யா, பஞ்சாக்ஷர தீபம் இரண்டும் கிடைத்தன. படித்து மகிழ்ந்தேன். பஞ்சாட்சர சர்மா அவர்கள் வணக்கத்துக்குரிய சைவத்தமிழ்ப் பேரறிஞர். அவர்தொடர்பாக ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் பற்றி வெளியிடப்பட்டது மிகவும் பொருத்தமான, மிக வேண்டப்படுவதுமான செயல். தங்கள் பணி என்றும் சிறந்தோங்க எல்லாம்வல்ல பரம்பொருளை வேண்டுகிறேன்.

**புனிதவாசம்,** **கலாபூஷணம், செவப்புலவர், சு. செல்லத்துரை.**
**பத்தாவத்தை,** **ஓய்வுபெற்ற அதிபர்**
**இளவாலை.**

..............விவிதவித்யா 7 வாசித்து மகிழ்ந்தேன். வேதசிவாகம அறிவுப் போட்டி என்னை மிகவும் கவர்ந்தது. புகழ் பூத்த பூசுரர்கள் பகுதிக்கு எமது தந்தையார் பற்றி எழுதி அனுப்பியுள்ளேன்............

**73, கஸ்கிசன் வீதி:** **சிவாச்சார்யமணி வ. சிவகுமாரக்குருக்கள்**
**திருகோணமலை.**

....நேசமுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்ததும் தெரியாததும்

**பிரம்மஸ்ரீ சோ. வரதராஜ சர்மா**
**கொழும்புத்துறை.**

## *ஆசனம்*

*பெரியோர்கள் ஒருபோதும் ஆசனமின்றி நிலத்தில் உட்காரக்கூடாது தினந்தோறும் செய்யும் ஜபம், அத்தியயனம் போன்ற சக்திகளை அவனது உடலிலிருந்து பாதாள உலகத்தில் இருக்கும் அசுரர்கள் அபகரித்து விடுவார்கள். ஆசனம் கிடைக்காத பக்ஷத்தில் சால்வையைப் போட்டு அதன்மேல் உட்காரவேண்டு மென்பது ஐதீகம். ஆசனமின்றி இருந்தால் நாளடைவில் பெருமை குறைந்து கொண்டே போகும்.*

*கிரியாரம்பத்தில் எப்போதும் முதல் ஆசன பூஜை செய்ய வேண்டும். அதற்கான ஸ்லோகம்*

அஶேஷ ஜகதாதாரம் அநந்தம் கூர்மரூபிணம்।
ஸ்வாநந்த ப்ரஸ்புரத்ரூபம் ஆத்மாநந்தம் நமாம்யஹம்॥

*கருத்து:- சமஸ்த்த உலகத்திற்கும் ஆதாரமானவரும் முடிவு இல்லாதவரும் கூர்ம வடிவினரும் ஆத்மாநந்த ஸ்ருபியுமாய் இருக்கின்ற பகவானை வணங்குகின்றேன்.*

ப்ருத்வி த்வயா த்ருதா லோகா: தேவி த்வம் விஷ்ணுநா த்ருதா।
த்வம் ச தாரய மாம் தேவி பவித்ரம் குரு சாஸநம்॥

*ஓ பூமியே! உன்னால் உலகம் சுமக்கப்படுகிறது. தேவி உன்னை விஷ்ணு தரித்திருக்கிறார். தேவி நீ என்னைத் தரித்திரு நான் இருக்கின்ற ஆசனத்தைப் பவித்திரமாகச் செய்.*

## *சிவபூஜை*

*ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராஶ்ச ஸ்வர்கே தேவா: ஶிவாஶ்ரயா:।*
*ப்ரமதா ஶௌநகாத்யாஶ்ச ப்ருதிவ்யாம் ஶிவாஶ்ரயா:॥*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறு இல்லாத நெற்றி பாழ், சிவாலயம் இல்லாத ஊர் பாழ், சிவ பூஜை இல்லாத ஜன்மம் பாழ், சிவனை அடையாத வித்தை பாழ் என்பதாகும். (ஶ்ருதிஸம்மதஹெ)

## சிவாகமங்கள்

காமிகம் முதல் வாதுளம் வரை 28 வகைப்படும்.

அஷ்டாவிம்ஶதி ஶிவாகமா:॥

காமிகம் யோகஜம் சிந்த்யம் காரணம் அஜிதம் ததா।
தீப்தம் ஸூக்ஷ்மம் ஸஹஸ்ரஞ்ச அம்ஶுமாந் ஸுப்ரபேதகம்।
விஜயஞ்சைவ நிஶ்வாஸம் ஸ்வாயம்புவமதாநிலம்।
வீரஞ்ச ரௌரவஞ்சைவ மகுடம் விமலம் ததா।
சந்த்ரஜ்ஞாநஞ்ச பிம்பஞ்ச ப்ரோத்கீதம் லலிதம் ததா।
ஸித்தம் ஸந்தாந ஶர்வோக்தம் பாரமேஶ்வர மேவ ச।
கிரணம் வாதுலஞ்சைவ அஷ்டாவிம்ஶதி ஸங்க்யயா॥
தேஷ்வாத்யே தஶ ஶைவாக்யா ரௌத்ரா அஷ்டாதஶேதி கீர்த்திதா:।
ததா ச பாராவஷ்டாதஶகம் ரௌத்ரமிதி ஶ்ருதம்॥

1. காமிகம்
2. யோகஜம்
3. சிந்தியம்
4. அஜிதம்
5. தீப்தம்
6. சூக்ஷ்மம்
7. சஹஸ்ரம்
8. அம்சுமான்
9. சுப்ரபேதம்
10. விஜயம்
11. நிச்வாசம்
12. ஸ்வாயம்புவம்
13. அநிலம்
14. வீரம்
15. ரௌரவம்
16. மகுடம்
17. விமலம்
18. சந்திரஞானம்
19. பிம்பம்
20. ப்ரோத்கீதம்
21. லளிதம்
22. சித்தம்
23. சந்தானம்
24. சர்வோக்தம்
25. பாரமேஸ்வரம்
26. கிரணம்
27. வாதுளம்
28. காரணம்

இவற்றுள் முன் பத்தும் (10) சிவபேதம் எனப்படும். பின் (18) பதினெட்டும் உருத்திரபேதம் எனப்படும்.

ஒவ்வொரு ஆகமத்திலும் ஞானம் கிரியை யோகம் சரியை என நான்கு பாகங்கள் உள்ளன. கர்ஷணம் முதல் பிரதிஷ்டை உத்சவம் பிராயச்சித்தம் பூஜைமுறை எல்லாம் கூறப்பட்டு இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்காணல்

**கொழும்பு, மருதானை, கப்பித்தாவத்தை ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் ஆலய மூத்த சிவாச்சாரியார், சமாதான நீதிவான், பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா அவர்கள்**



*நமது ஆலயங்களில் அடிக்கடி சிவாச்சாரியர்கள் மாற்றப்படுவதும் நமது சிவாச்சாரியார்கள் அடிக்கடி தாம் சேவையாற்றும் ஆலயங்களை மாற்றிக்கொள்வதும் பொதுவான வழக்கமாக இன்று அமைந்திருக்கையில் அறுபது வருடங்களுக்கு மேலாக ஓர் ஆலயத்தில் பிரதம சிவாசாரியாராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஓர் அந்தண குல திலகரை இம்முறை நாம் சந்திக்கிறோம்.*

*தொண்ணூறு வயது நிறைவு பெற்றிருக்கும் இந்த நேரத்திலும் ஆலயக்கடமைகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அந்த மூத்த சிவாச்சாரியாராகிய சமாதான நீதிவான். பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா அவர்கள் தமது செவ்வியின் போது எவ்வித குறிப்புக்களும் இல்லாமலே தமது பழைய வாழ்க்கை நினைவுகளை அசை போட்டு நல்ல ஞாபகசக்தியுடன் ஆண்டுகள் முதலியவற்றையும் கூறியபோது வியப்பேற்பட்டது. இனி அவரை நீங்கள் சந்திக்கலாம்.*

**கேள்வி:- உங்கள் பிறப்பு, சிறு வயது வாழ்க்கை முதலியவற்றை நினைவுகூர முடியுமா?**

*பதில்:-* யாழ்ப்பாணத்து நல்லூரில் 1915 நவம்பர் 6 ஆம் திகதி பிறந்தேன் பாலசுப்பிரமணியக் குருக்கள் சாரதாம்பாள் தம்பதிகளின் மூத்த புதல்வனாக நான் பிறந்தேன். எனக்கு ஒன்பது சகோதரர்கள். ஆரம்பக்கல்வியை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்திலும் அதன்பின் கந்தர்மடம் வித்தியாலயத்திலும் கற்றபின் சுன்னாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிராசீன பாடசாலையில் கல்வி கற்றேன். சுன்னாகத்திலிருந்த சிதம்பரசாஸ்திரிகள் எனக்கு சம்ஸ்கிருதக் கல்வியைக் கற்பித்து யஜ்ஞோபவீத தாரணமும் செய்து வைத்தார்.

**கேள்வி:- உங்கள் முன்னோர்கள்பற்றிச் சிறிது கூறுங்களேன்.**

**பதில்:-** தமிழகத்தின் கோதாவாரியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் அந்தணச் சிறார்களுக்கு உபாத்தியாயராயிருந்த **பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள்**தான் எனது பேரனார். சாலங்காயன கோத்ரம், ஆபஸ்தம்ப சூத்திரத்தைச் சேர்ந்தவர் அவர். அவர் அதே கோவிலுடன் தொடர்புடைய அந்தணர்களிடம் பெண் எடுத்து இல்வாழ்க்கை நடத்துகையில் 16 பிள்ளைகள் பிறந்தனர். ஆனால் எனது தந்தையார் பாலசுப்பிரமணியக்குருக்களும் எனது பெரிய தந்தையாரும் தவிர்ந்த ஏனைய குழந்தைகள் யாவரும் ஆறுமாதம், ஒருவருடம் ஆகிய வயதுகளிலேயே இறந்து விட்டனர்.

எனது பெரிய தந்தையாரும் நல்லூரில் **தம்பையாக் குருக்கள்** என்ற பெயரில் புகழ்பெற்ற **கார்த்திகேயக் குருக்களின்** சகோதரி **அமிர்தாம்பிகையை** மணந்து ஒரு வருடத்திலேயே காலமாகி விட்டார். எனது தந்தையார் மட்டுமே எஞ்சியிருந்தார்.

அக்காலத்தில் பிரபலம் பெற்றிருந்த ஆரியதிராவிட பண்டிதர் **முத்துக்குமாரசாமிக் குருக்களின்** தமையனார் **சாம்பசிவ சாஸ்திரிகளின்** மகள் **சாரதாம்பாளைத்** திருமணம் செய்தார். மூத்தமகனாக நான் பிறந்தேன் எனக்கு ஒன்பது சகோதரர்கள் உள்ளனர். எனது தந்தையார் 1934 இல் காலமாணார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:- உங்கள் திருமண வாழ்க்கை பற்றி......**

*பதில்:- 1942 இல் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் எமது திருமணம் நடைபெற்றது. எமக்குப் பதினொரு பிள்ளைகள் (மூன்று ஆண்களும் ஒன்பது பெண்களும்) உள்ளனர். இவர்களில் இருவர் மட்டுமே இங்கு உள்ளனர். ஏனையோர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். எனது மனைவி இரண்டு ஆண்டுகளுக்கு முன் காலமாகிவிட்டார்.*

**கேள்வி:- உங்கள் குருத்துவ சேவைகள் பற்றி........**

*பதில்:- 1925 இலிருந்து சுமார் ஆறு வருடங்கள் எனது தந்தையாருடன் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் கடமை செய்து அனுபவம் பெற்றேன். பின்னர் 1938 இல் கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயத்தில் கடமையேற்று இன்றுவரை இங்கேயே பணிபுரிகிறேன்.*

**கேள்வி:- இது ஒரு வியப்பான செய்திதான். இனி இந்த ஆலயம் பற்றியும் இதனோடு உங்கள் தொடர்பு பற்றியும் கூறுங்கள்.**

*பதில்:- மிகப்பழைமையான இக் கோயிலைத் தீவுக் கோயில் என அக்காலத்தில் கூறுவர். மருதானையின் ஓர் ஒதுக்குப் புறத்தில் நாற்புறமும் தண்ணீர் சூழ இது அமைந்திருந்தது. ஜனநடமாட்டம் அதிகமின்றிக் காடுபற்றிக் கிடந்தது. கோவிலும் அதிக சேதமடைந் திருந்தது. வணிக சைவர்களின் நிர்வாகத்தில் இக்கோயில் இருக்கிறது.*

*1938 இல் நான் இங்கு பொறுப்பேற்று இரண்டு நேரப் பூஜை செய்து வந்தேன்.*

*1949 இல் சங்கானை வடலியடைப்பு சிவஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள் அவர்களின் தலைமையில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் பின் ஒவ்வொரு 12 வருடங்களுக்கொருமுறையும் கிரமமாக கும்பாபிஷேகம் நடைபெற்று வந்தது. படிப்படியாகக் கோவிலும் வளர்ச்சி பெற்று வந்தது. பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் தேடி வந்து வழிபடத் தொடங்கினர். அரசியல் பிரமுகர்களும் வரத்தொடங்கியதால் செல்வாக்கும் அதிகரித்தது.*

*அருகிலேயே சிவன் கோவிலும் அமைக்கப்பெற்று வளர்ச்சிகண்டது. இருகோவில்களும் தனித்தனி நிர்வாகக்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்புகளின் கீழ், ஆனால் பரிபூரணமான புரிந்துணர்வுடன் ஒருசேர வளம்பெற்று அருள் விளக்கத்துடன் பொலிகின்றன.

கப்பித்தாவத்தைப் பிள்ளையார் கோவிலின் தொடர் வரலாற்றில் இப்போது ஒரு தேக்கநிலை காணப்படுகிறது. தொடர்ந்து நான்கு கும்பாபிஷேகங்கள் உரிய கால எல்லையில் நடைபெற்ற பெருமையைக் கொண்டிருந்தும் இப்போது பதினேழு ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்ட நிலையில் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை. இக்கோயிலின் பரிபாலனசபை அங்கத்தவர்கள் ஒவ்வொருவராக இழக்கப்பட்ட நிலையில் நிர்வாகப் பொறுப்புக்கள் சரிவர நடத்தமுடியாதிருப்பதாலேயே இந்நிலை வந்தது.

எனது இரு புதல்வர்கள் மற்றும் உறவினர்களின் ஒத்துழைப்புடன் நானே இம்முறை முன்னின்று பாலஸ்தாபனம் செய்திருக்கிறேன். திருப்பணிச் சபை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. கருங்கற் திருப்பணியாகச் செய்து அடுத்த ஆண்டில் கும்பாபிஷேகம் நடத்த உத்தேசித்துள்ளோம்.

**கேள்வி:- உங்கள் வாழ்வில் மறக்கமுடியாத சம்பவங்கள் ஏதாவது.......**

பதில்:- பெருமைக்குரிய சம்பவங்கள் சிலவற்றைக் கூறலாம். சுமார் 66 வருடங்களாக நான் இந்த ஒரே கேவிலில் கடமையாற்றுகிறேன். 25 ஆவது ஆண்டு நிறைந்த வேளையில் தற்செயலாக நான் யாழ்ப்பாணம் சென்றபோது பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள், நயினை ஐ. கைலாசநாதக் குருக்கள் முதலிய பிரமுகர்கள் திடீரென நல்லூர் சிவன் கோவிலில் ஒரு விழாவை நடத்தி எனக்கு விருது வழங்கிக் கௌரவித்தனர்.

இதேபோல் 50 ஆவது வருட நிறைவில் இந்து கலாசார அமைச்சின் சார்பில் அப்போதைய அமைச்சர் செல்லையா இராசதுரை அவர்களால் கொழும்பிலே பெரிய கௌரவம் வழங்கப்பட்டது.

**கேள்வி:- உங்கள் சமூகவியல் பங்களிப்புக்கள் பற்றி.........**

பதில்:- பல சங்கங்கள், சபைகளில் அங்கத்துவம் வகிக்கின்றேன். 1939 இலிருந்து ராமகானசபா அங்கத்தவராக இருந்து பின் உபதலைவராகி 18 வருடங்களாகத் தலைவராக உள்ளேன். கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய பிரதம குரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஸ்ரீ. சி. குஞ்சிதபாதக்குருக்களது முயற்சியால் உருவாக்கப்பட்ட சிவப்பிராமண சங்கத்திலும் ஐம்பது வருடங்களுக்கு மேலாக இணைந்திருக்கிறேன் அதன் உபதலைவர், தலைவர் பதவிகளை வகித்திருக்கிறேன்.

**கேள்வி:- எங்களுக்கு நீங்கள் கூறும் நல்லுரை என்ன?**

பதில்:- கடமையை ஒழுங்காக நிறைவேற்ற வேண்டும்.
அனைவருடனும் அன்பாக நடக்க வேண்டும்.
எல்லாரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும்.

## அளவைகள் பலவிதம்

அளவைகள் காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடம் தேவைகளுக்கேற்றபடி பலவிதமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்துக்களின் கிரியைகளில் பயன்படும் பல அளவீடுகள் பற்றிய விபரங்கள் ஆகமங்களில் காணப்படுகின்றன. அவற்றுட் சிலவற்றை **ஆனைக்கோட்டை, சாதக சிரோமணி ஜெகதீஸ்வரசர்மா B. A** அவர்கள் தருகிறார்.

1. **ப்ராதேச மாத்ரம்** - கைவிரல்களை விரித்து நீட்டிப் பிடிக்கும்போது பெருவிரல் நுனியிலிருந்து சுட்டுவிரல் நுனிவரையுள்ள தூரம்.

2. **தாலம்** - பெருவிரல் நுனியிலிருந்து நடுவிரல் நுனிவரையுள்ள தூரம்.

3. **கோகர்ணம்** - பெருவிரல் நுனியிலிருந்து ஞானவிரல் நுனிவரையுள்ள தூரம்.

4. **விதஸ்தி** - பெருவிரல் நுனியிலிருந்து சின்னிவிரல் நுனிவரையுள்ள தூரம்.

5. **ஹஸ்தமாத்திரம்** - முழங்கையிலிருந்து விரல் நுனிவரை (சுமார் ஒருமுழம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷூ௦ஜநெய வஞூாரதூ௭||

(மார்கழி மாதத்தில் ஆஞ்ஜனேய ஜயந்தி வருவதைமுன்னிட்டு இந்தப் புதிய ஸ்தோத்திரம் பிரசுரமாகிறது)

**ஆக்கம்:**

**சாஹித்ய வியாகரணாசார்ய ச. இரா. பாலகிருஷ்ண ஐயர்.**

நாரஷாஜி ஸெவ௱ஊாந வாஉவ௦க ஜாங்ஙிதூ௦
வாய ¯ஜாத வாய¯வெஶ ரஉ௱ர௵வ ஸொரஹிதூ௦
ஹக்ஷதஹொரக ஸொர௰ ஊ¯ஃவே வாவஸ௦௰ ஹ௦ஜந௦
ஹாவயாஜி ஷூ௦ஜநெய நாயக௦ கவீஶர௦||

ராஉஷ௵த ராஉஹக்ஷ ராஉநாஉ தொஷிதூ௦
ஹீஉஷெவ வ௵வ௱ ஜாத ஜீநாரக்ஷு நாயக௦
ராவணாஜி ஷைத௱ ஊஉ௱ ஹெதூ¯ஹ௵த வாநர௦
ஹாவயாஜி ஞ௦காநாஶ நாயக௦ ரவ¯வி௱ய௦||

ஃ௦ஜநாதூ ஜாதக௦ ஹ¯வி௦மஉாக்ஷ ஸொரஹிதூ௦
ஹிஞிதூாவ வாஉய¯ஜூ கி௦கிணீ ரவாவ௱த௦
ஹீதாஸொக்ஷீ நாஶந௦ ஊஹாண௱ வொதூ தாரக௦
ஹாவயாஜி உ௵ஊாஉணி ஊாயக௦ கீஸெஶர௦||

ஹவ௱ஹொரக மஉ௱ஊாந ஹவ௱ஶாவஹ வணிதூ௦
ஹவ௱ஸெளவ௱ ஊதூஊாந ஞ௦கிணீ௵விஉஷ௱ந௦
க¯ணஹெந ய¯க்ஷதூரதூ கண௱ஹாவஹ வீஜிதூ௦
ஹாவயாஜி வாதஜாத நாயக௦ கவீநீ௱ண௦||

வாஸிஜாத வ௱க்ஷஸெஶ வாஹிந௦ வஞீஉ¯வ௦
ஹிஃ யக்ஷ வாநராஜி வஉவெஸதூ¯ ஸவந௦
ஜஷஹக்ஷ வாஞிதாய௱ காய௱ஹிஃ ஊாய௦க௦
ஹா்வயாஜி ஔஷயாமஉ¯ஜூ௱த௦ கவீஶர௦||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமை வளர்த்துப் பரிசினை வெல்லுங்கள்.

பரிசுத் தொகை

ரூபா 2,000.00

பத்துப் பேருக்குப் பரிசு

# வேத சிவாகம அறிவுப் போட்டி 2

(சிவாசார்ய மாணவர்களுக்கானது)

*1. விநாயகரின் உற்பத்தி பற்றிப் பல்வேறு விதமான கதைகள் புராணங்களில் உள்ளன. அவற்றில் ஒன்று உமாதேவியார் தமது ஸ்நானத்தின்போது உடல் அழுக்கை உருட்டி வைத்தபோது அதிலிருந்து தோன்றியவர் விநாயகர் என்பது. இக்கதையை எடுத்துக் கூறும் வகையில் மஹாகணபதி சஹஸ்ரநாமத்தில் ஒரு நாமம் வருகிறது அது எது?*

*2. ராசிச்சக்கரத்திலே சில சந்தர்ப்பங்களில் அஷ்டக்கிரக சேர்க்கை நிகழ்ந்துள்ளது. ஆனால் நவக்கிரகம் ஒன்பதும் சேரக் கூடிய சந்தர்ப்பம் ஒரு போதும் இல்லை. ஏன்?*

*3. சிவபிரானைச் சங்கீதத்துடன் தொடர்புபடுத்தும் மூர்த்தி எது?*

*4. யாத்ரா ஹோமம், யாத்ரா தானம் என்பவற்றின் நோக்கம் என்ன?*

*5. பிரளயகாலத்தில் உலகம் அழிந்தபின் மீண்டும் சிருஷ்டிக்கப்படும் போது இறைவன் இறைவியர் எப்பெயரால் அழைக்கப்படுகின்றனர்?*

***விவிதவித்யா முகவரிக்கு 31-03-2005 இன்முன் மிகச்சரியான விடைகளை அனுப்பிவைக்கும் அதிர்ஷ்டசாலிகளுக்குப் பரிசு உண்டு.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் வாக்கும் வியாசர் வாக்கும்

அமரர். பண்டிதர். பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா

மகாபாரதத்துள் சிறியனவும் பெரியனவுமாகப் பெருந்தொகையான உபகதைகள் (உபாக்கியானங்கள்) அடங்கியிருக்கின்றன. பிரசித்திபெற்ற நளன்கதை, சாவித்திரிகதை, சகுந்தலை கதை என்பன பாரதத்துள் வரும் நீண்டகதைகள். இவையெல்லாம் சூதின் தீமை, பதிபக்தி, தபோபலம் என்பவை பற்றிய அறநெறிகளைப் போதிப்பதற்காகவே தருமர் முதலிய முக்கிய கதாபாத்திரங்களுக்கு பிருதஸ்வர் முதலிய பெரியவர்களால் எடுத்துரைப்பதாக வியாசராற் கூறப்படுகின்றன. சுவைமிக்க இக்கதைகள் கூறப்பட்டதன் நோக்கமே தர்ம போதனைதான் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

தமிழ்மொழியிலுள்ள அறநூல்களுள் திருக்குறள் உலகப் புகழ் வாய்ந்தது. ஆசிரியர் திருவள்ளுவர் தாம் புதியனவாக அறநெறிகளை வகுத்துக் கொண்டு தமது நூலை ஆக்கவில்லை. சைவசமயிகள் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்க நெறிகளை ஆறுமுக நாவலரே வகுத்தமைத்துச் சைவவினாவிடையை ஆக்கினாரென்று சிலர் கருதுவது போன்றதே திருக்குறள் நீதியை வள்ளுவர் வகுத்தார் என்பதும். சிவாகமங்களிலும் தருமசாஸ்திரங்களிலுங் கூறப்பட்டிருக்கும் ஆசார அநுட்டானங்களை நாவலர் தொகுத்துத் தந்தமை போன்ற ஓர் அருஞ்செயலே வள்ளுவர் செயலும்.

அவர் முன்னோர் கருத்துக்களைத் தாம் கூறுவதாகத் தமது நூலுள் தெளிவாகவே கூறியிருக்கிறார். "நூலோர் தொகுத்தவற்றுள்" (அறநூலுடையார் சிறந்த அறங்களென்று தொகுத்த அறங்களுள்) "என்ப" (என்று கூறுவர்) "அறங்கூறும்" (அறநூல்கள் கூறும்) என்பன வள்ளுவர் வாக்கு. திருவள்ளுவர் தமது காலத்தில் பெருவழக்காயிருந்த மகாபாரதத்தை அதனுட்சிறப்புப் பகுதியாயுள்ள பகவத் கீதையையும், மநு முதலியோரின் தரும சாத்திரங்களையும் கற்றறிந்தவராகையால் அவருடைய பல குறட்பாக்கள் மகாபாரத சுலோகங்களின் கருத்துக்களைக் கொண்டிருப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில உதாரணங்களைப் பார்ப்போம்.

முதற்குறளில் வரும் "அகர முதல எழுத்தெல்லாம்" என்னும் எடுத்துக்காட்டு கீதையில் கண்ணனின் கூற்றாக வரும்

अक्षराणां अकारोस्मि (எழுத்துக்களுள் முதலெழுத்தாகிய அகாரம் நான்)

என்பதைக் கருத்தில் கொண்டே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கலாற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து" என்பதன் மூலங்களாக,

यदा संहरते कामान् कूर्मोङ्गानीव सर्वथा

எனும் மகாபாரத சாந்திபர்வதத்து வாக்கியமும்

यदा संहरते चायं कूर्मोङ्गानीव सर्वशः।
इन्द्रियाणि इन्द्रियार्थेभ्यः तस्य प्रज्ञा प्रतिष्ठिता।।

என்னும் பகவத்கீதை 2ம் அத்தியாய சுலோகமும் அமைந்திருக்கின்றன.

மகாபாரதத்தில் விராடபர்வ்தில் வரும்

नास्ति यज्ञः स्त्रियः कश्चित् न श्राद्धं नाप्युपोषणम्।
यातु भर्तरि शुश्रूषा सा स्वर्गायाभिजायते।।

(பெண்ணுக்குத் தனியே வேள்வியோ சிராத்தமோ உபவாசமோ இல்லை. கணவனுக்கு எவள் பணிபுரிகிறாளோ அவள் சுவர்க்கத்தில் மதிக்கப்படுவாள்) என்ற சுலோகத்துப் பொருளையே வள்ளுவர்

"பெற்றான் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு"

என்னுங் குறளில் சரியாக அமைத்துக் கூறுகிறார்.

"எவரைக்கண்டு துறவிகள் பிறப்பிறப்புக்களிலிருந்து விடுபட்டுச் சம்சார சாகரத்தைத் தாண்டுவார்களோ அவர்கள் துக்கமடைவதில்லை" என்ற பொருளமைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

यं दृष्ट्वा यतयस्तात न शोचन्ति गतज्वराः।
जन्म मृत्यु भयान्मुक्ताः तीर्णाः संसार सागरम्।।

என்னும் அநுசாசன பர்வத்தில் வரும் சுலோகத்தின் கருத்தைப்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்" என்னும் குறளில் காணலாம்.

தெய்வம், விருந்து, பணியாள், தென்புலத்தார், தான் என்னும் இவ்வைந்திடத்தும் கடமை செய்யவேண்டும் என்றும் கடமை செய்யாதவனது வாழ்வு வாழ்வன்று என மகாபாரதம் விதிக்கிறது.

देवताथिति भृत्सानाम् पितृणां आत्मनस्तु यः।
न निर्वपति पंचानां उच्वसन् न स जीवति।।

இதேபோல் இல்வாழ்வானை மற்ற மூன்று ஆச்சிரமத்தவர்களும் அண்டிவாழ்கிறார்கள் என்றகருத்தை

एवं गार्हस्थमाश्रित्य वर्तन्ते इतर आश्रमाः।

என்று மகாபாரதம் கூறுகிறது. இவ்விரு கருத்துக்களும் முறையே

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்தாறோம்பல் தலை."

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

என்ற குறள்களில் தெரிவிக்கப்படுகின்றன.

இவ்வாறு திருக்குறளில் பல இடங்களில் நாம் மகாபாரதத்தைக் காணமுடிகிறது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

**அடுத்த இதழில்.........**

# ஞானப் பதில் அரங்கு

பல புதிய அன்பர்களின் சந்தேகங்களுக்கு அறிஞர்கள் பலரின் அறிவார்ந்த பதில்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்மம் எத்தனை வகைப்படும்?

மயிலணி, பிரம்மஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள்

தர்மம் நான்கு வகைப்படும் அதில் முதலாவது சாமான்ய தர்மம் பிள்ளைகள் பெற்றோரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? சீடன் குருவிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? கணவன் மனைவியிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? இத்தகைய சாமான்ய தர்மங்களைத் தானே பின்பற்றி எடுத்துக் காட்டினார் இராமபிரான்.

சாமான்ய தர்மத்தை ஒழுங்காகச் செய்து கொண்டு வந்தால் இறுதியில் ஒரு நிலைவரும். அந்த நிலையில் பகவானின் பாதங்களைத் தவிர வேறு எதுவும் சதம் அல்ல என்ற நினைப்பு வரும். இத்தகைய தர்மத்திற்கு **சேஷ தர்மம்** என்று பெயர். இதைப் பின்பற்றிக் காட்டினான் இலட்சுமணன்.

தூரத்தில் இருந்து கொண்டு எப்போதும் பகவானின் சிந்தனையாக இருப்பது **விசேஷ தர்மம்**. இஃது சேஷ தர்மத்தை விடக் கடினமானது. இதைக் கடைப்பிடித்துக் காட்டினான் பரதன்.

நான்காவது தர்மத்திற்கு **விசேஷதர தர்மம்** எனப் பெயர். பகவானைவிட அவரின் அடியார்களுக்குத் தொண்டு செய்வதே முக்கியம் என்று கருதி வருவது தான் இந்த தர்மம் சத்ருக்கினன் பாகவத உத்தமனாகிய பரதனுக்குத் தொண்டு செய்தே கரையேறி விட்டான்.

ஆக இந்த நான்கு தர்மங்களையும் இராமாவதாரத்தில் நான்கு அவதார புருஷர்கள் மூலமாக அவர் உலகிற்கு எடுத்துக் காட்டுகிறார்.

## முருகனும் தமிழும்

தமிழர்களின் தனிப் பெருந் தெய்வமாக முருகனை வழிபடுவதற்குக் காரணம் உண்டு.

முருகப் பெருமானுக்கு முகங்கள் ஆறு. தமிழிலும் வல்லினம் ஆறு, மெல்லினம் ஆறு, இடையினம் ஆறு.

பன்னிரண்டு தோள்கள் உடையவன் அவன். தமிழிலும் உயிர் எழுத்துக்கள் 12.

முருகன் பதினெட்டுக் (6x3=18) கண்களை உடையவன் அதே போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலும் 18 மெய்யெழுத்துக்கள் உள்ளன. முருகனின் திருக்கரத்தில் உள்ளவேல் வேறு எந்தத் தெய்வத்திற்கும் இல்லாத ஆயுதம். அது போல தமிழில் உள்ள ஆய்த எழுத்து வேறு எந்த உலக மொழிகளிலும் இல்லை. ஆய்த எழுத்தின் வடிவம் வேலை ஒத்ததாகும். இச்சை, கிரியை, ஞானம் என்ற மூன்று தன்மைகளையும் பொருந்தியது வேலாயுதம். ஆய்த எழுத்தும் இவற்றைக் குறிக்கும் வகையில் மூன்று புள்ளிகளைக் (ஃ) கொண்டது.

---

## WATCH

கவனித்துக்கொள்

| | | |
|---|---|---|
| W | - Watch your | *W*ords |
| A | - Watch your | Actions |
| T | - Watch your | *T*houts |
| C | - Watch your | Caractor |
| H | - Watch your | *H*ethle |

## துயர நினைவுகள் .........

இந்த இடைக்காலம் சைவத் தமிழ்க் கலாசார உலகிற்குப் பேரிழப்பான ஒரு காலமாகும். எழுத்தாளர் கே. வி. நடராஜன், பேரறிஞர் சொக்கன், புத்தொளி சிவபாதம் ஆகிய மூன்று முத்துக்களை நாம் இழந்திருக்கிறோம்.

"மைனர்ஐயா" என அழைக்கப்பட்ட பறாளாய் சிவஸ்ரீ வே. சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்களும் காலமாகிவிட்டார். இவர் வேத சிவாகமங்களில் பாண்டித்தியம் மிக்க சிவாசார்யப் பெருந்தகை என்பதுடன் சிற்பக்கலை நுணுக்கங்களை அறிந்தவரும் அற்புதமான ஓர் ஓவியக் கலைஞருமாவார்.

இவர்கள் யாவருக்கும் எமது அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழிப் போராட்டம்

**செம்மொழி என்று தமிழை அறிவிக்க இருக்கிறார்களே அதுபற்றி இன்னும் கொஞ்சம் விளக்க முடியுமா?**

செம்மொழி என்பதற்கு 'செம்மையாய் அமைந்த மொழி' என்று பொருள். இச்சொல் அகநானூற்றிலும் சிலப்பதிகாரத் திலும் இருக்கிற சொல் என்கிறார் மணவை முஸ்தபா. 'கிளாசிக்கல் மொழி' என்பதற்கு இணையான சொல்லாக செம்மொழி வழங்கப்படுகிறது.

சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம் போன்ற மொழிகள் செம்மொழியாக அங்கீகாரம் பெற்றுள்ளன. இந்திய மொழிகளில் சமஸ்கிருதம் மட்டுமே.

செம்மொழி எது? "பழைமை வாய்ந்த மொழியாகவும் தொன்மை இலக்கியச் சிறப்பை உடையதாகவும், மூல மொழியாக இருந்து அதிலிருந்து பிற மொழிகள் தோன்றுவதற்கான தாய்மொழியாகவும் இருக்க வேண்டும்" என்கிறார் வாக்னல்ஸ் என்கிற அறிஞர் இந்தத் தகுதிகள் தமிழுக்கு இருக்கின்றன. ஆனாலும் செம்மொழியாக இதுவரை அது ஆகவில்லை. காரணத்தை மணவை முஸ்தபா சொல்கிறார்.

ஆனாலும், தமிழைச் செம்மொழியாக்கும் போராட்டம் அப்போது வெற்றி பெறவில்லை. ஆயினும் நீறுபூத்த நெருப்பாக இருந்த அந்த உணர்வு 1918 ல் சைவ சித்தாந்த மாநாட்டிலும் 1919ல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலும் கிளர்ந்தன. அதன் தொடர்ச்சியாக இப்போது தமிழ்நாட்டின் 40 எம். பி. க்களின் கோரிக்கையை இந்திய மைய அரசு ஏற்றுள்ளது. ஆனாலும் இன்னும் அதிகாரபூர்வ அறிவிப்பு வரவில்லை.

இதனால் என்ன பயன் என்றால் தற்போது தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் தவிர்த்து வேறு எந்த நாட்டிலும் பல்கலைக்கழக மட்டத்தில் தமிழுக்கு என்று தனித்துறைகள் கிடையாது. புதுடில்லியில் கூட இல்லை. சமஸ்கிருதத் துறையின் கீழோ அல்லது கீழ்த்திசை மொழிகளில் ஒன்றாகவோதான் தமிழ் ஒட்டுக் குடித்தனம் நடத்துகிறது என்பதே உண்மை. இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளில் சமஸ்கிருதத்திற்கு மட்டுமே உலகமெங்குமுள்ள பல்கலைக் கழகங்களில் தனித் துறைகள் உண்டு.

தமிழும் செம்மொழியாக ஏற்கப்பட்டால் இந்த நிலைமை மாறும். சமஸ்கிருதம் அளவுக்கு உலகில் தமிழும் உரிய, உயரிய இடத்தைப் பெறும் என்கிறார் மணவை முஸ்தபா.

ஏறத்தாழ 120 ஆண்டுகளுக்கு முன்னர், ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியா இருந்தபோது ஆங்கில ஆட்சியின் வைஸ்ராய் கர்சன் பிரபு, உயர் நிலைப் பள்ளி வரை இருந்த தாய்மொழிக் கல்வியை (தமிழை) கல்லூரியிலும் ஒரு பாடமாகக் கற்பிக்க நடவடிக்கை எடுத்தார்.

ஆனால், அவரைச் சுற்றியிருந்த இந்திய அதிகாரிகள் சமஸ்கிருத ஆர்வலர்களாக இருந்ததால், தாய்மொழிக் கல்விப் பாடத்திற்குப் பதிலாக சமஸ்கிருதத்தை பாடமொழியாக்கத் தூண்டினர். இதற்கு ஆதரவாக நாடு முழுவதும் இருந்த சமஸ்கிருதப் பண்டிதர்கள் செயல்பட்டனர். இந்திய மொழிகளில் செம்மொழி என்கிற தகுதி சமஸ்கிருதத்திற்கு மட்டுமே இருப்பதால் கல்லூரிகளில் பாடமொழியாகும் தகுதிப்பாடு, சமஸ்கிருதத்திற்கு மட்டுமே உண்டு என்று வாதாடினர்.

அப்போது சென்னை கிறிஸ்துவக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியராக இருந்த சூரிய நாராயண சாஸ்திரி என்கிற பரிதிமாற் கலைஞர், சமஸ்கிருதத்தைவிடத் தமிழே தகுதி வாய்ந்த செம்மொழி என்று வாதிட்டார். இவர் வடமொழியும் அறிந்த வல்லுநர்.

இந்தப் போராட்டத்தில் இவருக்குப் பெருந்துணையாக இருந்தவர் மு. சு. பூரணலிங்கம் ஆவார். இவர்கள் இருவரது முனைப்பினால் கல்லூரிகளில் தமிழையே பாடமொழியாக்க வைஸ்ராய் முடிவு செய்தார்.

**மலேசியப் பத்திரிகையாகிய மலேசிய நண்பன் 8-8-2004 இதழில் வெளியாகிய இத்துணுக்கினை விவித வித்யாவுக்காக மலேசியாவிலிருந்து அனுப்பி உதவியவர்-...**

**எமது அன்பர் பண்டிதர் சிக்ஷ நிபுண பிரம்மஶ்ரீ கி. சதாசிவ சர்மா அவர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அடுத்த இதழில்..............



பலரும் அறிந்த சிவாசார்யப் பெருந்தகை ஓவியக் கலைஞர், அமரர், சிவஸ்ரீ வே. சிவசுப்பிரமணியக் குருக்களின் மைந்தன், உலகப் புகழ்பெற்ற - ஆனால் சொந்த நாட்டில் பலரும் அறியாத - சிற்பக் கலை வல்லுநர் பிரம்மஸ்ரீ சி. பாலகுமார் அவர்களுடனான செவ்வி இடம்பெறுகிறது.





**உங்கள் சந்தாக்களை உடனே அனுப்பி உங்கள் இதழ்களை உறுதிப்படுத்துவதுடன் விவிதவித்யாவின் வளர்ச்சிக்கும் உதவுங்கள்.**

**ஆண்டுச் சந்தா ( 4 இதழ்கள்)ரூ. 100.00**

**ஆயுள் சந்தா ரூ. 1000.00**

முகவரி
ப.சிவானந்தசர்மா
"விவிதவித்யா"
கந்தசாமிகோயில் அருகில்,
இணுவில், சுன்னாகம்,
ஸ்ரீலங்கா.

☎ 021-222-6004
e-mail:
vividhavidya@hotmail.com
vividhavidya@yahoo.com
Web site: www.geocity/
sarvanandamayapedam.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org